பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 09 2024 **WEDNESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – சிங்கப்பூர் இடையே இருதரப்பு ஒத்துழைப்புக்கான பேச்சுவார்த்தைகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை பங்கேற்கவுள்ளார்.
2. திரிபுராவில் செயல்பட்டு வந்த இரண்டு தீவிரவாத அமைப்புகள் ஆயுதங்களை ஒப்படைத்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.
3. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஓய்வூதியம் வரும் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து பயனாளிகளின் வங்கிக்கணக்கில் செலுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
4. மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிஜேபி-யின் நான்கு உறுப்பினர்களும், காங்கிரஸின் ஒரு உறுப்பினரும் இன்று பதவியேற்றுக் கொண்டனர்.
5. பாரிஸ் பாராலிம்பிக் பேட்மிண்டன் போட்டிகளில் பதக்கங்களை வென்று நாடு திரும்பிய வீரர்களுக்கு புதுதில்லி விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>

புருனே பயணத்தை முடித்துக்கொண்டு, இன்று பிற்பகல் சிங்கப்பூர் சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அந்நாட்டின் உள்துறை அமைச்சர் திரு சண்முகம், விமான நிலையத்தில் பிரதமரை வரவேற்றார்.

பின்னர், அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில், சிங்கப்பூர் பிரதமர் திரு லாரன்ஸ் வாங், கலந்துகொண்டார்.

இந்தியா – சிங்கப்பூர் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் உறவுகளை மேம்படுத்துவது குறித்து நாளை நடைபெறும் பேச்சுக்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

சிங்கப்பூர் அதிபர் மற்றும் பல்வேறு முக்கிய தலைவர்களையும் பிரதமர் சந்தித்து பேச உள்ளார்.

முன்னதாக, இந்தியாவுக்கும், புருனேவுக்கும் இடையே செயற்கைக்கோள் தொழில்நுட்பம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பிரதமர் திரு நரேந்திர மோடி, புருனே மன்னர் **Haji Hassanal Bolkiah** முன்னிலையில் கையெழுத்தாகியுள்ளது.

பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, விண்வெளி தொழில்நுட்பம், சுகாதாரம், இருநாட்டு மக்களுக்கு இடையிலான தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

இந்தியாவின் கிழக்கத்திய கொள்கையில் புருனே முக்கிய பங்கு வகிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த பேச்சுக்களின்போது குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

திரிபுராவில் செயல்பட்டு வந்த திரிபுரா விடுதலை முன்னணி, திரிபுரா புலிப்படை ஆகிய அமைப்புகள் ஆயுதங்களை ஒப்படைத்து திரிபுரா அரசுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன.

புதுதில்லியில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா முன்னிலையில், இந்த அமைப்புகளை சேர்ந்தவர்கள், திரிபுரா அரசுடன் ஒப்பந்தங்களை செய்து ஆயுதங்களை கைவிட்டு சாதாரண குடிமக்களாக செயல்படப் போவதாக ஒப்பந்தத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய உள்துறை அமைச்சர், இந்த அமைப்புகள் ஆயுதங்களை ஒப்படைத்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

திரிபுராவின் வளர்ச்சியை கருத்தில்கொண்டு இவர்கள், தீவிரவாத நடவடிக்கைகளை கைவிட்டு, இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளனர் என்றும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

வடகிழக்கு மாநிலங்களில் பல்வேறு அமைப்புகளுடன் இதுபோன்ற பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று அமைதிக்கான நடவடிக்கைகளை பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மக்களை தேசிய நீரோட்டத்தில் கொண்டுவருவது ஒன்றையே தொலைநோக்காக கொண்டு பிரதமர் செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வடகிழக்கு மாநிலங்களில் சாலை, ரயில் மற்றும் விமான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் மத்திய அரசு தொடர்ந்து செய்து வருவதால், வடகிழக்கு மாநில மக்கள் உடனான உறவு வலுப்பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வடகிழக்கு மாநிலங்களில் உள்ள 12-க்கும் மேற்பட்ட அமைப்புகளுடன் அமைதிக்கான உடன்படிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>

இளைய சமுதாயத்தினர் வரும் 25 ஆண்டுகளில் நாட்டில் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டுவருவார்கள் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கல்வி நிறுவனங்களின் வளர்ச்சித் திட்டம் குறித்த பயிலரங்கில் உரையாற்றிய அவர், நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள் வளமான கல்வி கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மாணவ, மாணவியருக்கு வழங்கும் பட்டங்கள், அவர்களுக்கு மிகுந்த பயனுள்ள வகையில் அமைய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

உயர்கல்வி பயில்வோர் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கும் வகையில் ஒரே சமயத்தில் வெவ்வேறு பாடங்களை கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கித்தர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பல்கலைக்கழக மானியக்குழு, ஒழுங்காற்று அமைப்பாக மட்டும் செயல்படாமல், உயர்கல்வி நிறுவனங்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்புகளையும், வசதிகளையும் உருவாக்கித்தர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், பல்கலைக்கழக மானியக்குழுவின் புதிய நடைமுறைகள் மற்றும் விதிகளையும் அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வெளியிட்டார்.

<<<<<<>>>>>

மாநிலங்களவை உறுப்பினர்களாக பிஜேபி-யின் திரு தைரியாசின் மோகன் பாட்டில், திரு கிரண் சௌத்ரி, திரு ராமேஷ்வர் தெலி, திரு ஜார்ஜ் குரியன் ஆகியோரும், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு அபிஷேக் மனு சிங்வி-யும் பதவியேற்றுக்கொண்டனர்.
மாநிலங்களவைத் தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் அவர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

<<<<<<>>>>>

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்ட ஓய்வூதியம் வரும் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து எந்தவொரு வங்கியின் கணக்கில் இருந்தும் பயனாளிகள் பெற்றுக்கொள்ளலாம் என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இதனை தெரிவித்த அமைச்சர், ஒருங்கிணைந்த பென்ஷன் விநியோக கட்டமைப்பு இதற்கான ஒப்புதலை அளித்துள்ளதாக கூறினார்.

இதனால், 78 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

**'EPF '** ஓய்வூதியதாரர்கள் காலதாமதமின்றி வங்கிக்கணக்குகளில் தங்களது ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள வழி பிறந்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

மத்திய ஒருங்கிணைந்த ஓய்வூதிய விநியோக கட்டமைப்பு நாடு முழுவதும் இத்திட்டத்தை செயல்படுத்த முன்வந்திருப்பது **'EPF '** கட்டமைப்பின் வளர்ச்சியில் ஒரு மைல்கல் என்றும் திரு மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மதுபானம் மற்றும் குளிர்பான வகைகளை ஒரு பில்லியன் டாலர் அளவுக்கு ஏற்றுமதி செய்வது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

வரும் சில ஆண்டுகளில் இந்த இலக்கை எட்டுவதற்கான தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்த வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுபான வகைகள் ஏற்றுமதியில் இந்தியா தற்போது 40-ஆவது இடத்தில் உள்ளது.

<<<<<<>>>>>

நீர்மூழ்கி மீட்பு சேவையில் இந்தியாவும், தென்னாப்பிரிக்காவும் இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளன.

இதற்கான ஒப்பந்தம் இந்திய கடற்படைக்கும், தென்னாப்பிரிக்க கடற்படைக்கும் இடையே கையெழுத்தாகியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தென்னாப்பிரிக்காவுக்கு மீட்புப்பணிக்காக நீர்மூழ்கிகள் தேவைப்படும் பட்சத்தில் அதற்கான உதவியை இந்திய கடற்படை செய்துதர இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

தென்னாப்பிரிக்க கடற்படையினர் பணியின்போதோ அல்லது விபத்தின்போதோ பாதிப்புக்கு உள்ளாகும்போது அவர்களுக்கு தேவையான உதவிகளை இந்தியா செய்துதரும்.

அதேவேளையில் அவர்கள் பாதுகாப்பாக செயல்படுவதற்கான திட்டங்களையும் இந்தியா வகுத்துத்தரும்.

இந்த ஒப்பந்தத்தில் இந்திய கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதியும், தென்னாப்பிரிக்க கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் மண்டே லாபிஸூ-க்கும் கையெழுத்திட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சச்சின் கிலாரி வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் குண்டு எறிதல் **F-46** போட்டியில் 16 புள்ளி மூன்று இரண்டு மீட்டர் தூரம் வீசி அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

வெள்ளிப்பதக்கம் வென்ற சச்சின் கிலாரி-க்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் விடுத்துள்ள செய்தியில், சச்சின் கிலாரி பல்வேறு இடர்பாடுகளையும் தாண்டி உலக அளவில் போட்டியில் சாதனை படைத்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் மேலும் பல சாதனைகளை அவர் படைக்க வேண்டும் என்றும் அவர் வாழ்த்தியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், சச்சினின் சாதனை அவருடைய வலிமையையும், உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துவதாக கூறியுள்ளார்.

அவரின் வெற்றி நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பாராலிம்பிக்கில் இந்தியா இதுவரை 3 தங்கம், 8 வெள்ளி, 10 வெண்கலம் என மொத்தம் 21 பதக்கங்களை வென்றுள்ளது.

---------

பாராலிம்பிக் போட்டிகளில் பதக்கங்களை வென்று நாடு திரும்பிய பேட்மிண்டன் வீரர்களுக்கு புதுதில்லி விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

குமார் நித்திஷ் தங்கப்பதக்கமும், துளசிமதி முருகேசன், சுகாஷ் எத்திராஜ் வெள்ளிப்பதக்கங்களையும், மனிஷா ராமதாஸ், நித்யஸ்ரீ சிவன் ஆகியோர் வெண்கலப்பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வெற்றிபெற்ற பேட்மிண்டன் வீரர்களை சந்தித்து அவர்கள் படைத்த சாதனைகளை பாராட்டினார்.

இந்த முறை பாரிஸ் பாராலிம்பிக்கில் இந்திய வீரர்கள் அதிக பதக்கங்களை பெற்று வருவது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் கூறினார்.

மேலும் பல சாதனைகளை பாராலிம்பிக் வெற்றியாளர்கள் படைத்து நாட்டுக்கு பெருமை சேர்ப்பார்கள் என்று திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

**<<<<<<END>>>>>**